16.06.2026.

O.S.No. 38/2024

PW1– மாரியம்மாள் –க/பெ. சுப்புராமன்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1ம் பிரதிவாதி)

1. வழக்குவிவரங்கள் என் கணவருக்கு தெரியும். 1ம் பிரதிவாதியின் எதிருரையை எனது கணவர் படித்துப்பாத்துள்ளார். புல எண்.571/13 எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் என்றால் சரிதான்.

2. எனது மூலப்பத்திரத்தில் புல எண்.89/2ல்9 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்து ஆதியில் கோபால் நாயுடுக்கு பாத்தியப்பட்டது என சொல்கிறேன் என்றால் சரிதான். அவரது தந்தை பெயர் மாடச்சி நாயுடு என்றால் சரிதான். அவரது தாத்தாவின் பெயரும் மாடச்சி நாயுடு என்றால் எனக்கு தெரியாது.

3. எனக்கு கோபால் நாயுடுவின் சகோதரர்கள் பெயர் தெரியாது. நான் கோபால் நாயுடுவின் தந்தையின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. நான் எனது பிராது பத்தி எண்.6 ல் சொல்லியுள்ள சங்கதிகள் சரிதான். நாங்களே பிரதிவாதிகளின் உரிமையை எங்களது பிராதில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

5. கோபால்நாயுடுக்கு, இசக்கியம்மாள் ஒத்திக்கு கொடுத்தாக நான் கேள்விப்பட்டுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தபசில் விவரம் சரிதான். அதில் விஸ்தீரணம் 3 செண்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 செண்ட் என்பது 121.4 ச.மீ என்றால் சரிதான். அதிலுள்ள அளவுகள் சரியானதா என்றால் அது குத்துமதிப்பாக எழுதப்பட்டது.

6. வருவாய் ஆவணங்களின்படி 1972 ல் எடுத்த நிலஅளவு மற்றும் புலவரைபடத்தில் நிலத்தின் அளவு தவறாக உள்ளது என கட்சி செய்தோம் என்றால் சரிதான். பட்டா எண்.217, 2004 ம் ஆண்டு கோபால் நாயுடு மனைவி மாரியம்மாள் பெயரில் பட்டா இருந்தது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதற்குபிறகு பாப்பாத்தியம்மாள் பெயருக்கு உரிமை மாற்றத்தின் மூலம் மாற்றப்பட்டது என்றால் சரிதான்.

7. கோபால் நாயுடு தனது மனைவிக்கோ, மகளுக்கோ எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் உள்ள சர்வேயர் வரைபடப்படி புல எண்.571/13 ன் அளவு 5.6 மீ என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது.

8. மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த சர்வேயர் வரைபடமே தவறாக உள்ளது. புலவரைபடத்திற்கோ, வருவாய் ஆவணங்களை எதிர்த்தோ நாங்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆனால் தாக்கல் செய்ய தயராக உள்ளேன்.

9. எனக்கு ஆணையர் அறிக்கை பற்றி தெரியாது.

10. தபசில் சொத்தின் மத்தியப்பகுதியில் உள்ள வீட்டின் கதவு எண்.2–2–62. என் வீட்டின் அளவுகள் தெரியாது. என் வீட்டின் கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியாது.

11. நான் வா.சா.ஆ.1 ஆவணத்தை தான் எனது மூலப்பத்திரம் என கூறுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட அளவுகளை விடவும், வருவாய்துறையில் உள்ள அளவுகளை விடவும் நான் கூடுதலாக உரிமம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதற்கான முறையான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி அதிலுள்ள 2 வீடுகளும் கூரை வீடாக இருந்தது, அதை தற்போது புதுப்பித்து அதே இடத்தில் தற்போது வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். ஆரம்பத்தில் மண் சுவராக இருந்தது, தற்போது கல்சுவராக உள்ளது என்றால் கல்சுவராக இருந்த காலத்தில்தான் எனக்கு தெரியும். நான் தான் பொதுவழிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்து 1ம் பிரதிவாதியை இடைஞ்சல் செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் வரைபடப்படி நான்தான் ஆக்கிரமிப்பு செய்வதாக துலங்குகிறது என்றால் சரியல்ல.

13. சுப்புராமன் பெயருக்கு எதன் அடிப்படையில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அவரது தாயார் பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார். நான்

போலியான ஆவணங்களை உருவாக்கி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த ஒரு ஆவணத்திலும் பொதுமுடுக்கு இல்லை என்றால் சரியல்ல. எனக்கு படிக்கத்தெரியாது.

14. எனது மூலப்பத்திரங்களில் பொதுமுடுக்கு என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது என கூறியுள்ளார்கள். எனக்கு படிக்கத்தெரியாது. முறையான ஆவணங்கள் இல்லாமல் பொய் குற்றச்சாட்டுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. 1ம் பிரதிவாதி எனதுவீட்டின் மேற்குபக்க சுவரை இடித்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பிரச்சனை செய்ய வேண்டும் என்ற காரணத்திற்காக வம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**